COMMEMORATIVE SOUVENIR
IN MEMORY OF

# MRS. INDRAKUMARI WIGNESWARAN

திருமதி இந்திரகுமாரி விக்னேஸ்வரன்
அவர்களின் அந்தியேட்டி
தினம் வெளியிடப்படும்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To :Darling sons Nirmalan, Yauwanan and their Appa

WHEN I MUST LEAVE YOU
FOR A LITTLE WHILE,
PLEASE DO NOT GRIEVE
AND SHED WILD TEARS
AND HUG YOUR SORROW TO YOU
THROUGH THE YEARS,
BUT START OUT BRAVELY
WITH A GALLANT SMILE;
AND FOR MY SAKE AND IN MY NAME
LIVE ON AND DO ALL THINGS THE SAME,
FEED NOT YOUR LONELINESS
ON EMPTY DAYS,
BUT FILL EACH WAKING HOUR
IN USEFUL WAYS,
REACH OUT YOUR HAND
IN COMFORT AND IN CHEER
AND I IN TURN WILL COMFORT YOU
AND HOLD YOU NEAR;
AND NEVER, NEVER BE AFRAID TO DIE,
FOR I AM WAITING FOR YOU
IN THE SKY!

*From- Amma*

*("When I must leave you" by Helen Steiner Rice)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார்-திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.



**INDRAKUMARI WIGNESWARAN**
**"POO"**

# இந்திரகுமாரி விக்னேஸ்வரன்

## 'பூ'

**ஆதியாம் ஆங்கீரஸ ஆனிமா மாத செவ்வாய்
ஆன இருபத்திமூன்று அட்டமிசேர் அத்தமுடன் சித்தயோக
ஓதுவளர்பிறை உற்ற ஆங்கில ஏழ்திகதி ஏழ்மாச
நீதிபதி விக்னேஸ்வரன்தன் நிறைமனை யாள் இந்திரகுமாரி
நீழ் புவியில் நிலையா வாழ்வு விட்டகன்று அருள்
சோதியிற் கலந்து தெய்வச் சுடரொளியாகி விண்ணில்
தூய்மை அருளில் துய்த்தாள் துளிர் ஒளி ஆனாள் அம்மா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலர்வு 27.2.1944 உலர்வு 7.7.92**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MRS. INDRAKUMARI WIGNESWARAN.

## *A Biographical Sketch*

Indrakumari was the eldest child of the late Thambiah Gunaratnam (Rtd. Director,Buildings) and wife Gnanawathie (Bubby). The latter was the daughter of Chittampalam Manicavasagar (former Chief Accountant, P.W.D.) and wife Athinayaki. Indra's brother Kumar presently works as a Maintenance Engineer in Saudi Arabia. Her sister Suhanyakumari is married to Nadeswaran an Electronic Engineer. Presently he is the Manager of the I.B.M. World Trade Corporation. Another brother Karunakumar died aged 22 years in a motor accident 15 years ago.

Born at Manipay on 27.02.1944 Indrakumari was educated at C.M.S. Ladies College,Colombo 7. She excelled in studies and sports during her college days. She was the Caption of the first Table Tennis Team during the year this game was introduced to Ladies College. She was a diploma holder in Home Science from Lady Irwin College, New Delhi. She also obtained the A.M.I. Diploma after a full training course at the Good Shepherd Convent AMI Centre whose classes were conducted at St.Bridget's Convent. Incidentally this Centre is the only centre of Montessori training in Sri Lanka recognised by the Headquarters in Holland. She functioned as a Montessori trained teacher in the United States for 3 years.

When she returned to Sri Lanka she married Wigneswaran, presently High Court Judge, Colombo in 1976. Mr.Wigneswaran is a graduate of Law (Ceylon University) and Arts (London University). He was at the time of marriage a practising Attorney-at-Law (Advocate,Proctor & Notary) and Lecturer in Law.

Both Indra and her husband had the fortune of coming into close contact with many Saints and Sages. The picture of the monk who indirectly brought them together, His Holiness Swami Shantanand presently of Malaysia, decorated their wedding invitation. Indra was a close devotee of the said Swami.

Many a time Indrakumari used to pinpoint the great affinity between Madame Montessori's teachings and those of the great 20th century philosopher, J.Krishnamurti.She visited Adyar with her family and obtained Krishnaji's blessings.

She was also very fond of Vimala Thakar of Mt.Abu,Rajasthan who visited Sri Lanka many times.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Once when she visited Yogi Ramsuratkumar of Thiruvannamalai in India everyone tried to persuade her not to ask for a picture of the "Beggar Swami" nor attempt to give any money to him, saying that he would chase her away. She persisted in the company of her younger son and obtained a lovely photograph of the Swami which adorned the head of her bed since then.

She visited Sai Baba,Guru Bawa, Markandu Swami and others during her early years of married life and obtained their blessings. She was also a votary of Ven. Alavetty Vinasithamby.

It was during the time her husband was stationed at Mallakam as District Judge that she chanced to come into contact with Swami Premananda of Matale. Thereafter for over 10 years she and her family became close devotees of this Swami, who is presently stationed at Trichi. She visited the Swami's Ashram almost every year since the Swami moved over to India. The first Lingam or the elliptical crystal brought out orally by the Swami on the Maha Sivaratri night was placed initially on her head this year and blessed.

The Swamiji in a letter addressed to Mr.Wigneswaran before the passing away of Indrakumari said "I know that the time will come soon for Indra to leave this world. You have my assurance that I will be with her and that she will attain Atma Shanthi."

Mrs. Wigneswaran was a child-like personality. She loved all children. She was very anxious to propagate Madame Montessori's teachings far and wide. Former Minister Wimala Kannangara used to get her to visit rural women in her electorate and lecture to them on the Montessori method of child care. She took part in Radio programmes too and shared her knowledge and experience. For sometime she taught at Uduvil Girls' College and St.Thomas' Preparatory School, Colpetty.

Before passing away she was fortunate to learn while still on her sick bed that her elder son had passed the G.C.E.(Ord.Level) from Royal College,Colombo obtaining distinctions in all eight subjects. She passed away at the Joseph Frazer Nursing Home on 07.07.1992 leaving behind her husband Wigneswaran and two sons Nirmalaguhan aged 15 years and Yauwanaguhan aged 10 years.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MRS. INDRA WIGNESWARAN

*I have known the late Mrs. Indrakumari Wigneswaran for many years. Having been one of the attesting witnesses at her marriage, I have known her rather closely from the time she became Mrs. Wigneswaran.*

*Daughter of Mr.Thambiah Gunaratnam, retired Director,. Buildings, Indrakumari excelled not only within the walls of the class room, but equally as well in sports,an essential aspect of complete education. Having introduced Table Tennis to C.M.S Colombo Ladies College she also became the first captain of the Table Tennis team.*

*Prior to her marriage, she was a montessori teacher in the United States. She subsequently taught at Uduvil Girl's High School and St. Thomas Preparatory School, Colpetty. She derived immeasurable pleasure in being among, and educating children.*

*Endowed with all the womanly virtues, Indrakumari led an exemplary married life with her husband Wigneswaran. Characteristic of their life was love and virtue, the quintessence of the householder's life.She was a housewife full of wifely virtues,a loving spouse, fond and affectionate mother and a duty conscious lady of the house. Her demise would naturally be an unbearable bereavement for her family. Though birth and death and premature demise are not unnatural, equally not, is despair at bereavement caused by the demise of loved ones.*

*May God almighty console Wigneswaran and the children in their bereavement.*

**Hon S.Sharvananda**
*Governor of the Western Province*
*Retired Chief Justice of the Republic of Sri Lanka*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE WAFTING OF A BLOSSOM

Indra Wigneswaran or 'Poo' as she was affectionately called, was verily a blossom that had got wafted away by the winds of the Gods into a land of etheric beauty, leaving behind the sheath that was racked with pain and suffering during the last few weeks.

On the last occasion when I saw her at the Joseph Frazer Nursing Home and was mentally reciting theMaha Mrytunjaya mantra for her well- being, I found that she could not move her limbs,but she had a beatific smile for me and the others who had dropped in to see her.

I had known her well from her childhood, as her parents Mr.&.Mrs.T. Gunaratnam were close family friends and their home in any part of Sri Lanka to which they went on transfer was always a peaceful holiday home for us.

On the other hand Wignes, as a fellow lawyer and later as a High Court Judge, was an intimate friend of mine for long years, and shared my interest in spiritual inquiry and philosophical pursuits.

Wignes and Indra resumed a previous karmic link on their own, almost at first sight, when each of them independently got attracted to Swami Shantanand's bhajan meetings in Colombo in the 'seventies and happened to meet each other there. My wife and I gave a supporting hand to the couple and with Swamiji's blessings they tied the nuptial knot and shouldered the responsibilities and the ups and downs of a grihastha's life for 15 years, with two loveable sons now ready to continue the family traditions.

Indra retained her childhood charm even in adulthood, and she played the entrancing role of both endearing wife and rebellious daughter to Wignes. I am aware that Wignes was very attached to her and always solicitous about her welfare, despite the customary disagreements that arise in any inter-family relationships.

Apart from the initial and sustained blessings of Swami Shantanand, the divine songster and saint of India and Malaysia, Indra has received the blessings of Swami Premananda of Matale, presently of Trichy, to whom Wignes has taken her on many occasions for healing sessions with the aid of materialized holy ash and Lingams.

May Indra's soul attain peace and Shanthi in the higher worlds, and may Wignes and the children be blessed with equanimity and spirit of selfless service to all around them.

**C.SHANMUGANAYAGAM**
*Advocate*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## INDRAKUMARI (POO) WIGNESWARAN

*nee Gunaratnam*

It is with a heavy heart that I write this appreciation of Indrakumari whom I always loved. I knew her as a very charming light hearted pleasant child -like personality. She was fully qualified at the G.S.C.A.M.I. Training Centre of Sri Lanka the venue being St..Bridget's Convent. This is the only Centre recognised by the Head Quarters of Holland that can offer AMI Diplomas to successful students.

I want always to remember Indrakumari as the lovable young child-like Adult who worked with us with devotion and conseientiously serving the pre - school child to lay a sound foundation. The last I heard of her was that she was planning and waiting for her recovery to come back to us once again and serve the child, working in our "Montessori House of Children".

As I strongly believe in rebirth I am certain that some day in the future her wishes will be granted. My sympathies are with her dear husband,children, brother, sister and dear mother.

May she ultimately attain Nibbana.

***Deshabandu* (Miss) Joyce Goonesekera**
7, Charles Circle
Colombo 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MRS. INDRA WIGNESWARAN

I am thankful for this opportunity of writing about Indrakumari for I hope that in doing so, my personal grief over the loss of someone very dear to me would be lessened.

I first came to know Indrakumari as a student in my arithmetic class at Ladies College. She had a flair for this subject and passed it with distinction at the G.C.E. examination. Later she got me to teach her Mathematics which too she passed very well. She followed the Lady Irwin Diploma Course conducted at Ladies College and then went on to do the A.M.I with which qualification she became a teacher in the U.S. She kept in touch with me and since her home was very close to Ladies College she would drop in for a chat when in Colombo. Her childlike warmhearted affectionate nature along with her simplicity and charm endeared her to all who came to know her.

Two years ago she came to see me with her elder son with the request I teach him Maths. It was then she told me about the dread disease that had taken hold of her. I was visibly upset and it was she who was cheering me up. She said to me "Miss! Please pray for me".

Her two sons Nirmalan and Yauvanan were dearer than life to her and her every thought was about them and their welfare. When she was out of Colombo taking some special medical treatment she wrote to me to give her joyful news that Nirmalan had obtained Distinctions in all eight subjects at the G.C.E O/L examination. I thank God she lived to hear that news that surely would have delighted her. Though her physical presence is removed from them she will always be with them in spirit watching over them and loving them.

Indrakumari has finished the race that was set before her and is now in the nearer presence of God her Maker where there will be peace and bliss for evermore.

May her husband Mr. Wigneswaran her sons her mother her brother and sister find comfort and consolation in that knowledge.

**Suhirtham Ratnanayagam**
*Senior Teacher*
C.M.S. Ladies College,
Colombo 7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MRS. INDRA WIGNESWARAN

It's difficult to believe that Indra is no more with us in this world- that we will never again see her fair face with the big red pottu on her forehead and the charming child-like smile.

Indra married my Law College Colleague Viswa 16 years back but it was only during the last two years that I came to know her very closely and realised what lovely qualities she possessed. She was a loving wife, a devoted mother and a loyal friend to all who knew her closely.

Indra was so concerned with the problems of others that she broke rest very often and neglected her own health. She was so fond of children, that all children of whatever age were very happy in her company.Thus my seventeen year old daughter found Indra a very loving companion during the period I was attached to an outstation Regional Office. She was also so hospitable that one could not leave her house without partaking in a meal.

Indra refused to believe that her life was to end so soon and went about doing all mundane things in her usual way- driving her children for classes, climbing the staircase and gasping for breath, building her new house and buying various fittings for it and doing the numerous household chores. Towards the end, she could do no more than lie on her bed and think of the scores of things yet undone for the family which were now beyond her power to do. She bore great pain courageously and though her untimely death was a great blow to her dear ones, I derive consolation by the fact that she suffers no more in this birth.

**_Wasanthatilaka Nanayakkara_**

*(LL.B. Cey.) LL.M. (Colombo)*
Attorney at Law,
*Deputy Commissioner,*
Inland Revenue Department

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MRS. INDRA WIGNESWARAN

Attending a funeral is always a sad experience. The atmosphere is sombre, mournful and the expression on the faces of those around, sorrowful. This was no different. The pain and anguish at the premature death of a person so loving and caring pierced the hearts of those present to bid farewell to Mrs. Wigneswaran on this, her final journey. Her death has left such a terrible void. To say that her family and friends miss her- in whatever superlative it is said- sounds a pitiful understatement.

I knew her for a comparatively short period of about three years, during which time I can truthfully say that I came to know her very well. Her two intelligent and well mannered sons Nirmalaguhan and Yauwanaguhan were my link to this family. The life of Mrs.Wigneswaran revolved around these two boys and her husband. The devotion and dedication with which she carried out her motherly duties was something very rare and unique in the context of modern family life. The achievements of her two young sons in many fields is ample testimony of her selfless and tireless devotion to them.

I vividly recall the sad day when she came to know of her illness and her sense of great despair at the thought of her family having to face the future without her. Despite the weight and the pain of her aching body she plodded on and carried out her duties as if nothing had changed until her physical strength began to slowly ebb away from her loving and dutiful self.

Although she is no more, pleasant memories of her will linger on like a sweet fragrance amongst her loved ones. May her family perhaps as a source of consolation,take note that their grief is shared by me and no doubt many,many others.

***VARUNI JAYASEKARA***

*ALCM,LTCL(SP / DR),LTCL(EFF / SP)*

*LTCL (Tesol),FTCL*

59/5A Gregory's Road

Colombo 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி. இந்திரகுமாரி விக்னேஸ்வரன்

# வாழ்க்கைக் குறிப்பு

கட்டிடத்திணைக்களப் பணிப்பாளராகவிருந்து இளைப்பாறிய காலஞ்சென்ற திரு. தம்பையா குணரத்தினம் அவர்களினதும் அவர் மனைவி ஞானவதி (ஃபபி) யினதும் மூத்தமகள் இந்திரகுமாரி. அவர் தாயார் ஞானவதி பொது வேலைகள் திணைக்களத்தின் முன்னைய பிரதம கணக்காளராகவிருந்த சிற்றம்பலம் மாணிக்கவாசகரதும் ஆதிநாயகியினதும் மகளாவார். இந்திரகுமாரியின் சகோதரர் குமார் சௌடி அரேபியாவில் பராமரிக்கும் பொறியியலாளராகப் (Maintenance Engineer) பணியாற்றுகிறார். இவரின் தங்கையார் சுகன்யகுமாரியின் கணவர் நடேஸ்வரன் (Electronic Engineer) ஒரு எலக்றனியல் பொறியியலாளர். தற்போது ஐ.பீ.எம். (I.B.M) ஸ்தாபனத்தில் பொது முகாமையாளராகக் கடமையாற்றுகிறார். இன்னொரு சகோதரர் கருணகுமார் சுமார் 15 வருடங்களுக்கு முன் தமது 22வது வயதில் விபத்தொன்றில் அகாலமரணமடைந்தார்.

1944ல் மானிப்பாயில் பிறந்த இந்திரகுமாரி கொழும்பு 7, சி. எம். எஸ். மகளிர் கல்லூரியில் கல்வி பயின்றவர். கல்லூரி நாட்களில் படிப்பிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்கியவர். கொழும்பு சீ. எம். எஸ் மகளிர் கல்லூரியில் முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட டேபிள்டெனிஸ் விளையாட்டுக்குழுவின் தலைவர் இவரே. இவர் நியூடெல்கி லேடி ஏர்வின் கலலூரியின் ஹோம்சயன்ஸ் டிப்ளோமா பட்டதாரி. அத்துடன் ஒல்லாந்து தேசத்து தலைமை அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையின் ஒரேயொரு மொன்டசூரி பயிற்சி மத்தியஸ்தானத்தில் முழுதாகப் பயிற்சிபெற்று தேர்ச்சியடைந்து ஏ. ஏம். ஐ டிப்ளோமா பட்டமும் இவர் பெற்றவர். இவர் 3 வருடங்கள் அமெரிக்காவில் மொண்டசூரி ஆசிரியையாகக் கடமையாற்றினார்.

பின்னர் இலங்கை திரும்பி தற்போது மேல்நீதிமன்ற நீதிபதியாக விளங்கும் அவர் கணவரை 1976ம் ஆண்டு மணந்து கொண்டார். திரு. விக்னேஸ்வரன் அவர்கள் கலைமானி (லண்டன்) சட்டமானி (இலங்கை) பட்டங்கள் பெற்றவர். சட்டத்தரணியாகவும், சட்டவிரிவுரையாளராகவும் அப்போது கடமையாற்றினார். இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் பல மகான்களின் ஆசியையும், அன்பையும் பெற்றவர்கள். இவர்களின் திருமண அழைப்பிதழ் கூட அவர்களை ஒன்று சேர்த்த சுவாமி சாந்தாநந்தாவின் உருவப்படத்தை முன் அட்டையில் கொண்டு வெளியிடப்பட்டது.

காலஞ்சென்ற ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் போதனைகள் எந்த அளவுக்கு மொண்டசூரி அம்மையாரின் கருத்துக்களுடன் ஒத்திருந்தன என்று திருமதி விக்னேஸ்வரன் அவர்கள் வியந்ததுண்டு. அடையாற்றில் சென்று கிருஷ்ணஜீயின் ஆசியைப் பெற்றார்.

பல தடவைகள் இலங்கை வந்து சென்ற விமலா தக்கார் அம்மையாரிடத்தும் மிகுந்த பற்று வைத்திருந்தார் இவர். அவரின் அன்பையும், அரவணைப்பையும் பெற்றிருந்தார்.

ஒருமுறை திருவண்ணாமலை சென்றிருந்தபோது யோகி இராம் சுரேத்குமாரைச் சந்திக்கச் சென்றார். அவரிடம் அவரின் படத்தைக் கேட்டால் ஏச்சும் பேச்சும் கேட்க நேரிடும் என்று எல்லோரும் கூறித் தடுத்தும் இந்திரா அவர்கள் அவரிடம் தனியாகத் தன் இளையமகனுடன் சென்று படம் கேட்டுப்பெற்றார். யோகியின் பூரண ஆசியையும் பெற்றார். அந்த யோகியின் படம் அவர் தலைமாட்டை அதன்பின்னர் அலங்கரித்தது. சங்கராச்சாரியார், சாயி பாபா, குருபாவா போன்றவர்களிடமும் சென்று அவர் ஆசி பெற்றார். அளவெட்டி அருட்திரு விநாசித்தம்பி மாஸ்டரிடம் மிக்க வாஞ்சை வைத்திருந்தார்.

சாவகச்சேரியில் கணவர் மாவட்டநீதிபதியாகக் கடமை ஆற்றும்போது மார்க்கண்டு சுவாமிகளின் ஆசியைப்பெற்ற இவர், மல்லாகத்திற்கு கணவர் மாற்றலாகிச் சென்ற காலத்திலேயே மாத்தளை சுவாமி பிரேமானந்தரைச் சந்திக்க நேர்ந்தது. பின்னர் சுமார் 10 வருடகாலம் திருமதி. விக்னேஸ்வரனும் அவரின் குடும்பத்தாரும் சுவாமி பிரேமானந்தரின் மிகக் கிட்டிய பக்தர்கள் ஆனார்கள். பல தடவைகள் இவர் திருச்சி ப்ரேமானந்த ஆசிரமம் சென்று சுவாமிஜியின் அருளையும், அன்பையும் ஆசியையும் பெற்றார். இவ்வருட சிவராத்திரி அன்று சுவாமிஜி அவர்கள் வெளிக்கொணர்ந்த மிகச்சக்திவாய்ந்த லிங்கம் வெளிக்கொணர்ந்த உடனேயே முதல்முதலாக திருமதி. விக்னேஸ்வரனின் தலையில் வைத்து அவர் ஆசிர்வதிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரகுமாரி அவர்கள் இறக்க முன் சுவாமி பிரேமானந்தரினால் அவரின் கனவருக்கு எழுதப்பட்ட கடிதமொன்றில் சுவாமிஜி அவர்கள் பின் வருமாறு கூறியிருந்தார்:-

"இவ்வுலக வாழ்க்கையை நீங்கும் காலம் இந்திராவுக்கு மிகவிரைவில் வரப்போகிறதென்று எனக்குத் தெரியும். ஒன்று மட்டும் உறுதி அளிக்கிறேன். நான் அவருடன் இருப்பேன். அவர் ஆத்ம சாந்தி அடைவார்."

திருமதி. விக்னேஸ்வரன் அவர்கள் குழந்தையுள்ளம் படைத்தவர். அத்துடன் எல்லாக் குழந்தைகளின் மீதும் அளவில்லா பற்றும் பாசமும் கொண்டவர். மொண்டசூரி பயிற்சி முறையைப் பரப்ப ஆர்வம் கொண்டிருந்தவர். இதனுல் முன்னைய அமைச்சர் விமலா கன்னங்கரா அவர்கள் அவரைக் கொண்டு பல தடவைகள் கிராமப் பெண்களுக்கு குழந்தை வளர்ப்பு பற்றியும் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது பற்றியும் விரிவுரைகள் நடத்தினுர். திருமதி. விக்னேஸ்வரன் அவர்கள் வானெலி நிகழ்ச்சிகளிலும் கலந்து தமது அறிவையும் அநுபவத்தையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளார். இவர் உடுவில் மகளிர் கல்லூரி, கொள்ளுப்பிட்டி சென்தொமஸ் கல்லூரி ஆகியவற்றிலும் சில காலம் ஆசிரியையாகப் பணியாற்றினுர்.

உயிர் நீக்கமுன் மூத்தமகன் நிர்மலகுகன் 1991ம் ஆண்டின் ஜீ.சீ.ஈ (சாதாரணதர)ப் பரீட்சையில் எல்லாப்பாடங்களிலும் (8) விசேடசித்திகள் பெற்று சித்தியடைந்தமையை அறிந்து மிகவும் சந்தோஷப்பட்டார். நிர்மலகுகன், யௌவனகுகன் என்ற இரு மகன்மாரையும் கணவர் விக்னேஸ்வரனையும் ஆழ்த்துயரத்தில் விட்டுவிட்டு அம்மையார் 7.7.92ல் செவ்வாய்க் கிழமை ஆனி 23ம் நாள் அட்டமிதிதியும், அத்தநட்சத்திரமும் உத்திராயணமும் கூடிய காலை 8மணி 15நிமிடமளவில் இறைவனின் அருள்சோதியில் கலந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருநாவுக்கரசுசுவாமிகள்

அருளிச்செய்த

முதற்றிருமுறையிலிருந்து.

## திரு அதிகைவீரட்டானம்

பண்- கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

*கூற்ருயின வாறுவிலக்ககலீர்கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்ருயடிக்கே யிரவும்பகலும் பிரியாதுவணங்குவனெப் பொழுதுந்
தோற்ருதென் வயிற்றினகம்படி யேகுடரோடுதொடக்கி முடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானதுறையம்மானே. (௧)

நெஞ்சம்முமக்கேயிடமாகவைத்தேனினையாதொருபோதுமிருந்தறியேன்
வஞ்சம்மிதுவொப்பதுகண்டறியேன்வயிற்றோடுதொடக்கிமுடக்கியிட
நஞ்சாகிவந்தென்னைநலிவதனைநணுகாமற்றுரந்துகரந்துமிட
ரஞ்சேலுமென்னீரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௨)

பணிந்தாரனபாவங்கள்பாற்றவல்லீர்படுவெண்டலையிற்பலிகொண்டுழல்வீர்
துணிந்தேயுமக்காட்செய்துவாழலுற்ருற்சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடிக்கொண்டு மெய்பூசவல்லீர்பெற்றமேற்று தீர்சுற்றும் வெண்டலைகொண்,
டணிந்திரடிகேள்திகைக்கெடிலவீரட்டானத் துறையம்மானே (௩)

முன்னம்மடியேனறியாமையினான் முனிந்தென்னை நலிந்துமுடக்கியிட
பின்னையடியேனுமக்காளும்பட்டேன்சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
தன்னையடைந்தார்வினைதீர்ப்பதன்ருேதலையாயவர்தங்கடனாவதுதா
னன்னடையாரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௪)

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற்கரைநின்றவர்கண்டுகொளென்சொலி
நீத்தாய்கயம்புகநூக்கியிடநிலைக்கொள்ளும்வழித்துறையொன்றறியேன்
வார்த்தையிதுவொப்பதுகேட்டறியேன்வயிற்றோடுதொடக்கிமுடக்கியிட
வார்த்தார்புனலாரதிகைக்கெடிலவீரட்டானதுறையம்மானே. (௫)

சலம்பூவொடுதூபமறந்தறியேன்றமிழோடிசைபாடன்மறந்தறியேன்
நலந்தீங்கிலுமுன்னைமறந்தறியேனுன்னாமமென்னாவின்மறந்தறியேன்
உலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வாயுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளா
யலந்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத் துறையம்மானே. (௬)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தேன்மனைவாழ்க்கையுமொண்பொருளுமொருவர்தலைகாவலிலாமையினால்
வயந்தேயுமக்காட்செய்துவாழலுற்றால்வலிக்கின்றதுசூலைதவிர்த்தருளீர்
பயந்தேயென்வயற்றினகம்படியேபறித்துப்புரட்டியறுத்தீர்த்திடநான்
அயர்ந்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (எ)

வலித்தேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன் வஞ்சமனமொன்றுமிலாமையினாற்
சலித்தாலொருவர்துணையாருமிலைச்சங்கவெண்குழைக்காதுடையெம்பெருமான்
கலித்தேயென்வயிற்றினகம்படியேகலக்கிமலக்கிட்டுக்கவர்ந்துதின்ன
அலுத்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (அ)

பொன்போலமிளிர்வதொர்மேனியினீர்புரிபுன்சடையீர்மெலியும்பிறையீர்
துன்பேகவலைபிணியென்றிவற்றைநணுகாமற்றுரந்துகரந்துமிடீ
ரென்போலிகளும்மையினித்தெளியாரடியார்படுவதிதுவேயாகில்
லன்பேயமையுமதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (கூ)

போர்த்தாயங்கோரானையினீருரிதோல்புறங்காடரங்காநடமாடவல்லா
யார்த்தாரக்கன்றனைமால்வரைக்கீழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய்
வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தாலென்வேதனையானவிலக்கியிடா
யார்த்தார்புனல்சூழதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௧0)

*(* இம் முதலாம் தேவாரத்தை பலமுறை உணர்ச்சியுடன் பாடியதில் இந்திரகுமாரியின் கடைசிநாட்களின் போது அவர் உடல் வேதனை குறைவடைந்ததென்று கூறியிருந்தார். இப்பதிகம் சூலை நோய் தீர ஓதியருளியது)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்த சுவாமிகள்

### அருளிச் செய்த இரண்டாந் திருமுறையில் இருந்து
### வேயுறுதோளி-பண்-பியந்தைக்காந்தாரம்.
### திருச்சிற்றம்பலம்

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனா
னாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழன்வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே
யாசறுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (1)

என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்கவெருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலைபுனல்சூடிவந்தெனுளமேபுகுந்தவதனா
லொன்பதொடொன்றோடேழுபதினெட்டோடாறுமுடனாயநாள்களவைதா
னன்பொடுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (2)

உருவளர்பவளமேனியொளிநீறணிந்துவுமையோடும்வெள்ளைவிடைமேன்
முருகலர்கொன்றைதிங்கண்முடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனாற்
றிருமகள்கலையதூர்திசெயமாதுபூமிதிசைதெய்வமானபலவு
மருநெதிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (3)

மதிநுதன்மங்கையோடுவடபாலிருந்துமறையோதுமெங்கள்பரம
னதியொடுகொன்றைமாலைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனாற்
கொதியுறுகாலனங்கிநமனோடுதூதர்கொடுநோய்களானபலவு
மதிகுணநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (4)

நஞ்சணிகண்டனெந்தைமடவாடனோடும்விடையேறுமெங்கள்பரமன்
றுஞ்சிருள்வன்னிகொன்றைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடுமுருமிடியுமின்னுமிகையான பூதமவையும்
அஞ்சிடுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (5)

வாள்வரியதளதாடைவரிகோவணத்தர்மடவாடனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றைநதிசூடிவந்தெனுளமேபுகுந்தவதனால்
கோளரியுழுவையோடுகொலையானைகேழல்கொடுநாகமோடுகரடி
யாளரிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிளமுலைநன்மங்கையொருபாகமாகவிடையேறுசெல்வர்நடைவா
ரொப்பிளமதியுமப்புமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
வெப்பொடுகுளிரும்வாதமிகையானபித்தும்வினையானவந்துநலியா
வப்படிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (7)

வேள்படவிழிசெய்தன்றுவிடைமேலிருந்துமடவாடனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றைமலர்சூடிவந்தெனுளமேபுகுந்தவதனா
லேழ்கடல்சூழிலங்கையரையன்றனோடுமிடருனவந்துநலியா
வாழ்கடனல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (8)

பலபலவேடமாகும்பரனாரிபாகன்பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்குமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
மலர்மிசையோனுமாலுமறையோடுதேவர்வருகாலமானபலவு
மலைகடன் மேருநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (9)

கொத்தலர்குழலியோடும்விசையற்குநல்குகுணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியினாகமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனாற்
புத்தரொடமணைவாதிலழிவிக்குமண்ணறிருநீறுசெம்மைதிடமே
யத்தகுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே (10)

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னிவளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனாதியாயபிரமாபுரத்துமறைஞானஞானமுனிவன்
றானுறுகோளுநாளுமடியாரைவந்துநலியாதவண்ணமுரைசெ
யானசொன்மாலையோதுமடியார்கள்வானிலரசாள்வராணைநமதே. (11)

திருச்சிற்றம்பலம்.

(துர்க்கோள்களின் தாக்கத்தைக் குறைக்க உதவும் பதிகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதாஞ்சலி

## அன்னை மலரடிக்கோர் நன்மலராய் சென்றனையோ

அன்பொழுகு புன்னகையில் அழகு முகம்மலர
அருளொழுகும் உள்ளத்தே ஆனந்தம் தவழ
பண்பு செறி இல்லத்தே தெய்வ பக்குவம் உயர
பரவு நல் விருந்தோம்பல் பணிவோடு வளர
நன்நீதி துறைத்தலைவன் நாயகனின் பின்னால்
நற்கடமை பலவாற்ற வந்த தவமானதவமே
உன்பிரிவு தாங்காது உளமொடிந்து வாட
உடன் விடையை தந்து ஓடிவிட்ட காரணமேன்.

நின்நெற்றிக் கண்ணாக நிறை கணவன் நிற்க
நின்திரு விழியாக இரு மகன்கள் சார
உன் சுற்றார் நற்புகழில் உளமெல்லாம் மகிழ
உதவுவோர் வந்துனது அன்புநிலை கூற
தன்நிகராம் நீதிபதி விக்னேஸ்வரன் தன்
தவமனையில் தனிமனையாய் வந்துற்ற மயிலே
இந்நிலையில் இளவயதில் ஏனம்மா தாயே
இறை நிழலில் நீ ஏக காரணமேன் சொல்வாய்.

அன்றொருநாள் மட்டுநகர் மண்ணில் நின் தலைவன்
அமைவான நீதிபதியாய் நிற்கும் வேளை
சின்னவன் நான் உன்னில்லம் தேடிவரும் காலை
சிந்தை நிறை அன்போடு என்னோடு உரையாடி
என் இனிய சிந்தையிலே அன்றிருந்து இன்றுவரை
ஏற்றி வைத்த அன்புக்கோ நின் இறுதி நாளில்
என்முகத்தைக் கண்டு இதமாக பேசி இன்று
ஏதும் மொழி பேசாமல் உறங்குதியோ பெண்ணரசே.

கணவனவன் உன்னை கண்மணியாய்க் கண்டான்
கடமைக்கு போம்போதும் கண்ணே உனைப்பிரியான்.
மணவாழ்வில் அவன் வாழ்வில் மணமான மலராய்
மங்கை நீ மார்பணைந்த செங்கமல உருவே
தினமுனது அருகிருந்து நின். கணவன் பேசும்
தித்திக்கும் மொழி மறந்து தெய்வ நதி சேர்ந்தனையோ
மணம் கமழும் மங்கலத்தில் சுமங்கலியாய் நீபோக
மாதவத்தைச் செய்தனையோ மாதர்குல குடி விளக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமகன் இன்று நின் பிரிவைத் தாங்காமல்
நிறை உள்ளம் ஒடிந்து நெக்குருகி நிற்கின்றான்
பாதிவழி வாழ்க்கையிலே பாரிநீ பிரிவாய் என்று
கணமேனும் நினைக்காது நின் கணவன் துடிக்கின்றான்
நீதி ஒருபக்கம் நிறை புகழைத்தரவே நின் பிரிவு ஒருபக்கம்
நீழ் மனையில் விளக்கணைய இருளான அவன் வாழ்வு
சோதிக்க இறைவனுக்கு துணிவென்ன வந்ததுவோ
சொல் இறைவா இவ்வுலகில் நின் விதியின் சூழ்ச்சிதானா.

வென்றுவிட்ட விதியை நொந்து வெடிக்கிறது எமதுள்ளம்
மன்றிலிட்ட விளக்கின்று மாகாற்றில் அணைகிறது
அன்பிலிட்ட தாயைவிட்டு இரு கன்று பிரிகிறது
நன்றிலிட்ட நீதிகலம் துடுப்பிழந்து போனதுவே

உன்னைப்பிரிந்தோம் உன்னன்பை பிரியவில்லை
உன்னுடலை இழந்தோம் உன் உறவை இழக்கவில்லை
நின் நிழலில் இக்குடும்பம் நிறைவாக வாழ நீ என்றும்
தண்ணொளியாய் தற்காப்பாய் தளராமல் தாயே

*அன்னை மலரடிக்கோர் நன்மலராய்ச் சென்றனையோ*
*உன்னை மறவோம் உளமேற்றி போற்றிடுவோம்.*

**உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்**

ஸ்ரீ ரெங்கதாஸ் சுவாமிகளும் தொண்டர்களும்
ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் கோவில்

விஸ்வபிரம்மஸ்ரீ
வை. இ. எஸ். காந்தன் குருக்கள்
ஆன்மீகப் பணியகம்—
இந்து தர்மோதயம்
158, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-13.

(7-7-92)

கவிதை ஆக்கம்:- **கவிஞர் கண்மணிதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.7.1992ல் இறைபதம் அடைந்த இந்திரகுமாரி விக்னேஸ்வரன் அவர்களை நினைந்து ..........

## கணவர் - ஏக்கம்

தெய்வதப் பெண்ணே இந்திரகுமாரி!
கைவைத்துன்னை வேட்ட நாள்முதலாய்
என்- உள்ளத்திலிருந்து ஊனில் கலந்து
உயிராய்த்திகழ்ந்து ஒளிர்ந்தனை மாதே!
பொன்னைப் பேணிக் காப்பது போலே
தன்னை மறந்து எந்தனைக் காத்தாய்!
உன்னை இழந்தேன் உயிரை இழந்தேன்
நம்மிரு சிறார்க்காய் உடலைச்சுமந்தேன்.
அன்னை சக்தியின் அடியில் கலந்தாய்
பின்னை வருவேன் வரும்வரை பொறுப்பாய்!

## பிள்ளைகள் : நிர்மலகுகன், யௌவனகுகன் ஏக்கம்

அம்மாவோ! அம்மாவோ! எம் இனிய அம்மாவோ!
எம்மைச் சுமந்து உயிர்கொடுத்த அம்மாவோ!
அப்பாவும் நீயும் அருகிருந்து அரவணைக்க
எப்போதும் நாங்கள் எமை மறந்து களித்திருந்தோம்

நோய்க்கு நீ ஆளாகித் துயருற்ற போதினிலும்
தாய்க்குரிய பண்புடனே வேதனையைக் காட்டவில்லை
சேய்க்குரிய பணிகளெல்லாம் தப்பாமல் செய்துவந்தாய்
வாய்க்கரிசி போட்டதல்லால் வேறென்ன நாம் செய்தோம்?

அப்பாவும் நாமுமுனை என்றென்றும் நினைத்திருப்போம்
தப்பாமல் பெயர் சிறக்கப் புகழுற்று நிலைத்திருப்போம்
எப்போதும் இறையொளியில் சுடர்விட்டு நிறைந்திருப்பாய்
இப்பாரில் இணையுனக்கு எவருமிலா எம் தாயே!

## தேற்றப்பா

வாழ்விது கனவு- மாயையின் நிறைவு-
ஏனிந்த மயக்கம்- என்றென்றும் கலக்கம்-
அவன் பதம் போற்றித்திருப்பணி ஆற்றி
சிவன் பதம் சென்றால் அதுவன்றோ நன்றாம்-
- எதுவுமே எம் கையில் இல்லை.

நயினை சாயிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலஞ்சென்ற திருமதி இந்திரகுமாரி விக்னேஸ்வரன்

காலஞ்சென்ற திருமதி. இந்திரகுமாரி விக்னேஸ்வரன் அவர்களை நான் பல ஆண்டுகளாக அறிவேன். அவர் திருமதி. விக்னேஸ்வரன் ஆன நாளிலிருந்து நான் அவரை நெருங்கி அறிந்துள்ளேன். ஏனெனில் அவரது திருமணப் பதிவில் நான் ஒரு சாட்சியாகக் கையொப்பமிட்டுள்ளேன்.

இளைப்பாறிய கட்டடப்பகுதிப் பணிப்பாளரான திரு. தம்பையா குணரத்தினம் அவர்களின் மகளாகப் பிறந்த இந்திரகுமாரி ஏட்டுக் கல்வியில் மட்டுமல்லாது, உண்மையான கல்வியின் ஒரு கூறான விளையாட்டுத் துறையிலும் வாகை சூடியவர்.

கொழும்பு மகளிர் கல்லூரியில் 'ரேபிள் ரெனிஸ்' விளையாட்டை புதுமுகப்படுத்தியதோடமையாது விளையாட்டுக் குழுவின் முதலாவது தலைவியாகவும் கடமை ஆற்றியவர்.

மணமுடிக்குமுன் ஐக்கிய அமெரிக்காவில் மூன்றாண்டு காலம் மொன்றசொரி ஆசிரியையாகக் கடமையாற்றிய இவர் பின்னர் உடுவில் பெண்கள் கல்லூரியிலும் கொள்ளுப்பிட்டி பரி. தோமஸ் கல்லூரியிலும் ஆசிரியையாக இருந்தவர். பிள்ளைகளுடன் பழகுவதிலும் அவர்களுக்குக் கல்வி புகட்டுவதிலும் பேரின்பங் கண்டவர் இந்திரகுமாரி.

மனைமாட்சி அனைத்தையும் ஒருங்கே கொண்டு மனைத்தக்க மனையாளாக விளங்கிய இந்திரகுமாரி கணவர் விக்னேஸ்வரன் அவர்களுடன் எடுத்துக்காட்டான இல்வாழ்க்கை வாழ்ந்தார். இல்வாழ்வின் பண்பும் பயனுமான அன்பும் அறனும் இவர்களது இல்வாழ்க்கையிற் குறைவற மலிந்திருந்தது. மனையாட்சி நிறைந்த மனையாளாகவும், அன்பிற்கு இலக்கணமான காதல் மனைவியாகவும் பாசம் சொரியும் அன்னையாகவும் கடமையிற் கண்ணுங்கருத்துமான இல்லத்தரசியாகவும் விளங்கிய மாதரசியின் மறைவு அவரது குடும்பத்திற்குத் தாங்கொணாத பேரிடராக இருக்கும். தோன்றுவதும் மறைவதும் சருகு கனியுடன் காயும் பிஞ்சும் உதிர்வதும் உலகியற்கையே எனினும் அன்புடன் கூடி உள நிறைந்து வாழ்பவரைப் பிரியும் வேதனையில் கையற்றுத் தவிப்பதும் மனித இயற்கையே.

காதல் மனையாளை இழந்து தவிக்கும் விக்னேஸ்வரன் அவர்களும் அன்பு அன்னையை இழந்து துடிக்கும் குழந்தைகளும் ஆறித் தேற ஆண்டவன் அருள்வானாக.

*மாண்புமிகு க. சர்வானந்தா அவர்கள்*
மேல் மாகாண் ஆளுநர்
*இலங்கைக் குடியரசின் முன்னைநாள் பிரதம நீதியரசர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீதவான் இல்லம்**
புகையிரதநிலைய வீதி
சாவகச்சேரி
9.7.92

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய திருவாளர் விக்னேஸ்வரன் அவர்கட்கு.

வானொலி மூலம், தங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட ஈடு செய்ய முடியா இழப்பினைக்கேட்டு, நம் குடும்பத்தினர் அனைவருமே ஆறாத் துயரம் அடைந்தோம்.

மல்லாகத்தில் தம்பியரும், தாயாரும்,தாங்களும், ஒன்றாய் கூடி இறை உணர்வோடு இன்பமுற வாழ்ந்த நாட்களை, குமணனும்,கோகுலனும், ரமணனும் இன்றும் இனிதே நினைவு கூர்ந்து, அதே கணம் சோகத்தில் கலந்து வேதனை அடைந்து நிற்கிறோம்- இவ் வேதனை மிக்க வேளையில், எங்கள் சிந்தனையும், பிரார்த்தனையும், உங்களுடன் சேர்ந்து நிற்கின்றது.

இம் மண்ணில், இத்தனை ஆண்டு, இத்தனை மாதம்,இத்தனைநாட்கள் என்று பிரமன் முன் கூட்டியே எழுதி விடுகின்றான். அவன் எழுத்தை அவனே மாற்றுவது இயலாது என்று நம்புபவர்கள் இந்துக்கள். அவர் (இந்திரா அம்மையார்)முன் வினைத் தொடர்பால், தங்களை அடைந்து தம்பியர் இருவரையும் தந்து, தக்க சான்றோராக அவர்கள் வாழ வழி வகுத்து, தானம், தர்மம், இறைசிந்தனை அனைத்துமே தாங்கி வாழ்ந்து, தன் காலம் கனிந்ததும் இறை இன்பத்தை எய்தியுள்ளார்.

குழந்தை உள்ளம், கனிந்த பார்வை, இறையருளை மறவாத கனிந்த பக்குவமான மனம், குழந்தைகளும் தாங்களும் குறைவின்றி நிறைவுடனே நலமாக வாழவேண்டுமென்ற குடும்பப் பாசம்,எவ் எவற்கும் எக்கணமேனும், எத்தீங்கும் எண்ணாத கபட மற்ற கருணை உள்ளம்- இதனைவிட ஒரு இந்துவான தமிழ்த்தாய் வேறெதனைக் கொண்டிருக்க முடியும்? எனவே தான் கடமை தவறாத கருணையுள்ள தாயாக இறுதிவரை வாழ்ந்து இறைவனது பாதத்தை அடைந்துள்ளார்.

இப்பிறவியில், எண்ணத்தால், சொல்லால், செயலால், எவ் உயிர்க்கும் எத்தீங்கும் எண்ணாத உத்தமிக்கு முன் செய்த ஊழ்வினையே முன் தோன்றி முழுதுமாய் வருத்தி கவலை பல தந்து நின்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்தம் ஆன்மாவை சுத்தி செய்து ஆண்டவனார் அருட் பாதம் தன்னில் சேர்த்தது. தம்பியர் இருவருக்கும் ஆறுதல் கூற, நேரில் வர இங்குள்ள நிலைமையோ சீராயில்லை.

அன்னையார் கண்ட கனவெல்லாம் நினைவாக்கி அம்மாவின் ஆன்மாவைச் சாந்தி செய்ய, அளப்பரிய சாதனைகளைத் தாங்கள் நிலைநாட்ட வேண்டும். தந்தைதாய் செய்து வைத்த தவத்தின் பேறே தம்பியர் நீர் இருவரும், என்றுணர்ந்து கல்வியில், கலை ஞானத்தில், தெய்வத்தின் ஆசிபெற்று வாழ்வில் உன்னத நிலையை அடைய வேண்டும்.

தங்கள் அனைவரையும் நேரில் கண்டு தம்பியரை அணைத்து, ஆறுதல் சொல்ல, இங்குள்ள நிலைமையோ இடம் தரவில்லை. ஆதலால், அம்மாவின் பெயரைச் சொல்லி ஆன்ம ஈடேற்றம் வேண்டி எங்கள் குல தெய்வத்தை வேண்டி நிற்கின்றோம்.

அன்பும் பாசமும் உள்ள
மு.திரு நாவுக்கரசு
மனைவி, மக்கள் மூவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலஞ்சென்ற திருமதி இந்திரகுமாரி விக்னேஸ்வரன்

" நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு "

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக் கிணங்க 1992ம் ஆண்டு ஜூலை மாதம் ஏழாம் திகதி இவ்வுலக வாழ்வு நீத்து, இறையடி சேர்ந்தார் திருமதி. இந்திரகுமாரி விக்னேஸ்வரன் அவர்கள்.

காலன் அவர்களை இப்பூவுலகைவிட்டுப்பிரித்து விட்டான் என்பதை என்னால் நம்பவே முடியாமல் இருக்கிறது. நல்லதொரு மனைவியாக, சிறந்த குடும்பத் தலைவியாக, பாசம் நிறைந்த தாயாக விளங்கிய அவர், தம் இள வயதிலேயே தம்மிரு அன்புச் செல்வங்களையும், நீதிமகனாம் அன்புக் கணவரையும் எப்படித்தான் விட்டுப்பிரிந்தாரோ என்பதை நினைக்கையிலே இது வெறுங் கற்பனைதானோ என்று தான் எனக்கு எண்ணத்தோன்றுகின்றது.

என்னுடன் திருமதி.இந்திரகுமாரி விக்னேஸ்வரன் அவர்கள் மிகவும் குறுகிய காலந்தான் நெருங்கிப் பழகிய போதிலும், மிகநீண்டகாலம் பழகியது போன்றதோர் தோழமை உணர்வுதான் தோன்றுகிறது. என்றும் என்னுடன் உரையாடும் போது 'ஜரினா', 'ஜரினா' என அன்புடன் அழைக்கும் குரல் என் காதில் இன்னும் இரீங்காரமிட்டுக் கொண்டேயிருக்கின்றது. அவவின் வேடிக்கை கலந்த பேச்சு, சிறு பிள்ளை போல் பழகும் விதம்,மற்றவரை எந்தவிதத்திலும் மனம் நோகவைக்காத தன்மை, சிரிக்கப் பேசித் தனது கவலைகளையும், மற்றவர்களது கவலையையும் போக்கும் சுபாவம் எல்லாம் என்நாளும் என் மனதில் இரைமீட்டுக் கொண்டேயிருக்கின்றன.

மேலும், என்னுடன் பழகிய அந்தக் குறுகிய காலத்தில் கற்புள்ள மகளிருக்குரிய நாற்பண்புகளும் ஒருங்கே அமையப்பெற்ற அவர் தனது துணைவர் நீதித்துறையிலே நிகரற்ற பெருமகனாகத் திகழ்வதற்கும், தம்மிரு குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்கும் பெருதும் உறுதுணையாகத் திகழ்ந்தார்.

அன்னார், இயற்கையிலேயே தாயன்பும், பிள்ளைப்பாசமும் மிகுதியாகக் கொண்டதனால் தானோ என்னவோ அவர் சிறுபிள்ளைகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கக் கூடிய மொண்டசூரி பாலர்கல்விப் போதனாசிரியர் பட்டப் பயிற்ச்சியைத் திறம்படக் கற்று பரீட்சையில் தேறி, இலங்கையிலும் அமெரிக்காவிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியைத் தொழிலைச் செய்யும் வாய்ப்பைப் பெற்றார். இத்தகைய குணங்கொண்ட அவரை "குழந்தை மனங் கொண்ட குணக்குன்று" எனக் கூறின் மிகையில்லை.

அன்னாரது பிரிவினால் துயருறும் அன்புக் கணவர், அவர் தம் இரு செல்வங்கள் ஆகியோருக்கு எனது ஆறுதலைக் கூறி, அன்னாரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பதிற் பதிவாளர்,
மேல் நீதிமன்றம் (5)
கொழும்பு 12

இவ்வண்ணம்,
ஜரினா பேகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Late Mrs. Indrakumari Wigneswaran gave prime place to purity, cleanliness and orderliness during her lifetime. Therefore keeping this souvenir without tearing or tarnishing it would be a show of respect to her.

தூய்மைக்கும், சுத்தத்திற்கும், ஒழுங்கிற்கும் முதலிடம் கொடுத்தவர் காலஞ்சென்ற திருமதி இந்திரகுமாரி விக்னேஸ்வரன் அவர்கள். ஆகவே இந்த நினைவு மலரைக் கிழியாமல் அழுக்குப் படாமல் வைப்பதே நாம் அவருக்குக் கொடுக்கும் மரியாதையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## Thanks

*We thank each and everyone who helped in treating the late Indrakumari Wigneswaran during her sickness, those who participated in her funeral arrangements after her passing away, provided meals and other help to us during the intervening period up to date, contributed articles for the souvenir and in many ways gave of their valuable time, energy and love in organising the commemorative function at the Womens' International Club Hall. A special word of thanks to our Printers who brought out this souvenir at very short notice.*

Husband & Children
of the late Indrakumari.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INDRAKUMARI'S PATERNAL
## Geneological Table




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




THE

Per Book Post

Y. E. S. Kanthan Kurukkal
Sri Devi Kannmai Amman Temple
158, Sri Kathiresan Street
Colombo 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org